# இறைவனுள் புகழ்பாட- இங்கே

இறைவனுள் புகழ்பாட- இங்கே
இதயங்கள் பலகோடி
துறையெல்லாம் கடந்தவனே-உன்
துணையொன்றே நாம்தேடி ( 2 )

**1**
மறை பொருளானவனே - உன்னை
மனங்களே சிறை வைத்தோம் ( 2 )
குறையுள்ள கோவிலிலே - உன்னை
கொண்டு நாம் குடிவைத்தோம்

**2**
அன்பு உன் பேர் அறிவோம் - தூய
அறிவென்றும் நாம் தெரிவோம் ( 2 )
இன்பம் நீ எனத் தெளிவோம் - நல்ல
இரக்கம் நீ என மொழிவோம்

**3**
சத்தியம் உன் பெயராம் - எனச்
சாற்றுவோம் எம் உயிராம்
நித்தனே உனைப் பணிந்தோம் - உன்
நினைவினில் நாம் கனிந்தோம்.